# மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்க திட்டப் பணி

## தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆய்வு

சென்னை, ஜன.8: வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் இடையிலான வழித் தடத்தில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆய்வு செய்தார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் நிறைவடைந்து, சென்னை விமான நிலையம்-வண்ணாரப்பேட்டை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாம் வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூரை அடுத்துள்ள விம்கோ நகர் வரை 9.051 கிலோமீட்டர் தொலைவுக்கு விரிவாக்க திட்டப்பணிகள் ரூ.3,770 கோடி செலவில் நடைபெற்று வந்தன. தற்போது இந்த திட்டப் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.



வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரயில் பணிகளை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன் மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர் (திட்டங்கள் ராஜீவ் நாராயணன் திவேதி, இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்ட உயர் அலுவலர்கள்.

இதற்கிடையில், இந்த விரிவாக்கப் பாதையில் டீசல் ரயில் இன்ஜின் மூலமாகவும், மெட்ரோ ரயில் மூலமாகவும் கடந்த மாதம் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

எஞ்சியுள்ள திட்டப்பணிகளை முடித்து, இந்தப் பாதையில் ரயில் சேவை ஜனவரி மாதம் இறுதியில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் வழித்தடத்தில் சுரங்கப்பாதை மற்றும் உயர் நிலைப்பாதையில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடைபெறும் இறுதி கட்ட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் எஞ்சியுள்ள பணிகளை துரிதமாக முடிக்க அலுவலர்களுக்கு அவர் அறிவுரை வழங்கினார். சோதனை ஓட்டத்தில் இருந்த மெட்ரோ ரயிலில் உள்ள வசதிகளையும் ஆய்வு செய்தார். சோதனை ஓட்டம் குறித்து விவரங்களை அவர் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், நிறுவனத்தின் இயக்குநர்(திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதி, இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) ராஜேஷ் சதுர்வேதி ஆகியோர் உடனிருந்தனர்.